

அ.தி.மு.க.வை சார்ந்த துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வார்டு 56க்கு உட்பட்ட இளைஞர்கள் எஸ்.ஆர். சண்முகம், பாக்யராஜ், மணிவண்ணன், யுவராஜ், அருண் ராஜ் ,சுரேந்தர், தேசையா, மணிகண்டன், சிவா ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சியில் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் .ஏ. ராதா, பி.அசோக் குமார் உடன் இருந்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திருமழிசை பேரூர் தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மகாதேவன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.மோகன் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## அண்ணா தி.மு.க., அமித்ஷா தி.மு.க.வாகிவிட்டதே!

# தேர்தலுக்கு முன் ஒரு கூட்டணி - தேர்தலுக்குப் பின் வேறொரு ‘அமித்ஷா பிராண்ட்’ கூட்டணி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 23-
எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டிய அ.தி.மு.க. - அமித்ஷா தி.மு.க.வாக ஆகிவிட்டது. இது பெரியார் நாடு - பீகார் அல்ல; ‘அமித்ஷா பிராண்ட்’ கூட்டணி இங்கு எடுபடாது. தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி உறுதி செய்யப்பட்ட ஒன்று என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டுத் தேர்தல் அரசியல் களம் குறித்து, அன்றாடம் வெளிவரும் செய்திகளையும், தகவல்களையும் கண்டு, பரிதாபப்படுவதா? வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா? என்பதை நினைத்து, வருந்தி, புரிந்து, ‘திராவிட மாடல்’ ஆட்சியை மீண்டும் இரண்டாவது முறையாக சென்னை கோட்டையில் ஆட்சிச் சிம்மாசனத்தில் அமர்த்திட, மக்கள் - வாக்காளர் பெருமக்கள் தெளிவான, உறுதியான முடிவுக்கு வந்துவிட்டனர்!

**அண்ணா தி.மு.க.வா – அமித்ஷா தி.மு.க.வா?**

‘அ.தி.மு.க.தான் கூட்டணிக்குத் தலைமை’ என்று பெயரளவில் கூறிவிட்டு, இன்னொருபுறம், அமித்ஷா (அண்ணா) தி.மு.க.வாக அதனை டில்லி ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.விடம் அடகு வைத்து, எல்லாவற்றிற்கும் டில்லிக்குக் காவடி தூக்கி, அதன் முகவரியை இழக்க வைத்துவிட்டார் பரிதாபத்திற்குரிய எதிர்க்கட்சித் தலைவரான பழனிசாமி.

அரசியல் வியூகத்தில் அவர் எவ்வளவு வினை தேர்ந்தவர் என்பதைப் புரிந்துகொள்ள, சில மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரே ஒரு நிகழ்வை நினைவுபடுத்திக் கொண்டாலே போதும்!

அவர் சென்றிருந்த தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில், நடிகரின் புதுக்கட்சிக் கொடியைச் சுட்டிக் காட்டியதைக் கண்டு, (யாரோ காட்டினர் என்பதை வைத்து) உடனே அந்த நடிகரின் கட்சி தனது தலைமையில் உள்ள கூட்டணியில் சேர்ந்து கொள்ள முடிவு செய்துவிட்டதாகவே யூகித்து, கூட்டணிக்கு இப்போதே “பிள்ளையார் சுழி” போட்டாகி விட்டது என்று முக மலர்ச்சியுடனே முழக்கமிட்ட சோக நாடக வசனம் ஒன்றே போதாதா?

**அன்று இராமாபுரம், போயஸ் தோட்டம் – இன்று டில்லியா?**



மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்றவர்கள் அ.தி.மு.க.வுக்குத் தலைமை தாங்கி நடத்திய காலகட்டத்தில், டில்லிதான், தமிழ்நாட்டிற்கு (இராமாபுரத்திற்கும், போயஸ் தோட்டத்திற்கும்) வந்து, பேசி கூட்டணி அமைத்தது.

இப்போதோ, அமித்ஷாக்கள் அக்கூட்டணியைத் தேசிய ஜனநாயக கூட்டணி (NDA) என்று அழைப்பதோடு, எடப்பாடி பழனிசாமி அவர்களை ஏதோ பொம்மை போல வைத்துவிட்டு, அவர்களே செயலாற்றுகின்றனர்!

மூன்று முறை பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு (மதுராந்தகம், மதுரை, திருச்சி) வந்தார், சென்றார். எந்தத் தாக்கமும் ஏற்படவே இல்லை.

**நடிகர் கட்சியை இழுக்க முயற்சி!**

அதனால், தங்கள் கூட்டணிக்குத் தோல்வி உறுதி என்பதை அரசியல் ரீதியாகக் கணித்து, நடிகர் கட்சியை எப்படியாவது வளைத்து, தமது கூட்டணியில் கொண்டு வந்து, தி.மு.க.வுக்குப் பலமான போட்டியை உருவாக்கலாம் என்று திட்டமிட்டு, அதற்குரிய ஆயுதங்களாக ஒருபுறம் சி.பி.அய்., மற்றொரு புறம் அவரது புதிய படமான ‘ஜனநாயகன்’ திரைப்படம் வெளிவர முடியாத அளவிற்குத் தணிக்கைத் தடங்கல்களைத் தொடரும் வியூகம் இறுக்கியது.

**எத்தனை எத்தனை இடங்களில் பாய்ச்சல்கள்!**

இதுபற்றி டில்லியில் ஒரு களம் மட்டும் போதாது என்று கருதி, மும்பையிலும் பல்முனை அழுத்தங்களை அவருக்குத் தந்துள்ளனர் என்று 17.3.2026 அன்று ‘தினமலர்’ நாளேட்டில் வெளிவந்த செய்தியை அப்படியே எடுத்துப் போட்டு, சில விளக்கங்களை 19.3.2026 அன்று அறிக்கையில் எழுதினோம். அங்கு என்ன நடந்தது? என்று இன்றைக்கு அதே நாளேடு, இன்று (21.3.2026) சில செய்திகளையும் வெளியிட்டுள்ளது.

டில்லிக்கு நடிகர் சென்றிருந்தபோது, உள்துறை அமைச்சர் அமித்ஷா மகன் ஜெய்ஷா என்பவருக்கு நெருக்கமானவர்களை அங்கு சந்தித்ததாகவும், அங்கிருந்து சென்னை திரும்பிய பின்னர், மீண்டும் ‘வளைகாப்பு’க்காக என்று சொல்லி, மும்பைக்குத் தனி விமானத்தில் நடிகர் சென்றிருப்பதாகவும், அங்கும் சில தொழிலதிபர்களை சந்திக்கவிருப்பதாகவும் அச்செய்தி குறிப்பிடுகிறது. டில்லியிலும், மும்பையிலும் மாறி மாறி நடக்கும் சந்திப்புகள் குறித்த செய்திகளை - வரி பிளந்து ஆய்வு செய்தால், (Reading between lines) ஒன்று நன்றாகப் புரியும்!

**‘பூனைக்குட்டி வெளியில் வந்துவிட்டது!’**

‘‘பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது’’ - இப்போது என்னால் முடியாது, ‘‘அடுத்துப் பார்த்துக் கொள்ளலாம்’’ என்று அந்த நடிகர் கூறியதாக ‘தினமலர்’ ஏட்டின் செய்தி முடிப்பு கூறுகிறது!

இதிலிருந்து பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ்.சை எதிர்ப்பதற்கு நடிகர் இயக்கம் தயாராக இல்லை. ஆனால், பா.ஜ.க.வை தனது ‘கொள்கை எதிரி’ என்று வசனத்தை மட்டுமே பேசுவார். தி.மு.க. ஆட்சியைத் தடுத்து, அதன்மீது ‘இல்லாத பொல்லாத’ குற்றச்சாட்டுகளை - அப்பாவி ரசிகர்கள் வாயிலாகப் பரப்பும் ஊடகங்களின் திட்டமிட்ட ஏற்பாடுகளை நம்பியே அவர் களம் இறங்கியுள்ளார் என்பது நாளும் வெளிச்சத்திற்கு வந்து கொண்டே இருப்பது புரியவில்லையா?

**தி.மு.க. அரசியல் எதிரியாம் – பா.ஜ.க. கொள்கை எதிரியாம்!**

இரண்டில் எது முதலில் எதிர்க்கப்படவேண்டிய ஒன்று என்பதை அரசியலில் ‘அனா, ஆவன்னா’ புரிந்த எவரும், எது ஆபத்து என்று சொல்வார்களே!

“பிறகு பார்த்துக் கொள்ளலாம்’’ என்பதை உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார் என்றால், அதற்கு என்ன அரசியல் அர்த்தம்?

**பி.ஜே.பி.யின் ‘பி டீம்’தான் நடிகர் கட்சி!**

தமிழ்நாட்டுத் தேர்தலுக்குப் பின், பல சித்து வேலைகளுக்கு, இப்போதே தயாராகிவிட்டார்; மற்றொரு ‘மும்பை - மராத்தி, அரியானா, பீகார் வேலைகள்’ கருக்கொள்ளத் தொடங்கி விட்டன என்பதுதானே!

இதை நன்கு முன்பே கணித்து ‘திராவிட மாடல்’ ஆட்சியின் முதலமைச்சரும் தி.மு.க. கூட்டணியின் ஆற்றல்மிகு தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், “நடிகர் கட்சி பி.ஜே.பி.யின் ‘பி டீம்’’’ என்று குறிப்பிட்டது எத்தகைய முன்னோக்கு - சரியான கணிப்பு என்பது புரிந்துவிட்டது!

எனவே, தமிழ்நாட்டிலும், மற்ற வடபுலத்து வித்தைகளை செய்து “தேர்தலுக்கு முன்பு ஒரு கூட்டணி’’ அது முடிந்து முடிவு எப்படியானாலும் - அதற்குப் பிறகு “பா.ஜ.க. அமித்ஷா பிராண்ட் அரசியல் ஆட்சிக் கூட்டணி என்ற கட்சித் தாவலின் ‘புதிய அவதாரங்கள்’ உருவாக்கம்”என்றுதிட்டங்கள் ஓடுகின்றன போலும்!

**இது பீகார் அல்ல – பெரியார் நாடு!**

மறவாதீர், இது பெரியார் நாடு, பீகார் அல்ல; இங்கே தேர்தல் முடிவுகளே திட்டவட்டமான மாற்றமாக இருக்குமே தவிர, ஏமாற்றமாக, ‘குடுகுடுப்பைக்காரரின் ஒட்டுப் போட்ட பட்டுச்சட்டையாக’ ஒருபோதும் அமையாது என்பது உறுதி!

என்றாலும், அரசியல் எவ்வளவு மலிவான கீழிறக்கம்? தமிழ்நாட்டு அரசு, அரசியலைப்பற்றி யார் யாரெல்லாம் முடிவு செய்வது என்ற ஒரு விவஸ்தையே இல்லையா? விலா நோக சிரிப்பாய் சிரிக்கிறது!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டமன்றத் தேர்தல் 2026: வாக்காளர் பட்டியலில்

# விடுபட்ட வாக்காளர்கள் பெயர் சேர்க்க கால அவகாசம் நீட்டிப்பு!

## தமிழ்நாடு தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 23-
தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் - 2026-ல் வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்கள் பெயர் சேர்க்க கால அவகாசம் வழங்கி தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

சிறப்பு தீவிர திருத்தம் முடிவடைந்த பின் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெற்றிருந்தால் மட்டுமே நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்க இயலும்.

பெயர் விடுபட்டு இருப்பின் பெயர் சேர்க்க கால அவகாசம் 26.03.2026 வரை உள்ளது. இதனை பயன்படுத்தி தகுதியானவர்கள் அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்து, வாக்களிக்கும் ஜனநாயக கடமையை தவறாது நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள் கூட்டம் மாத்தூரில் வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு 2026 ஆம் ஆண்டு திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடர அயராது நிர்வாகிகள் பாடுபட வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்கினார். க.காசிநாதன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, பி. நிர்மல் குமார், வி. கார்த்திகேயன், கே. ராஜா, எஸ். உதயகுமார், பி.ஜெயராஜ், துரைசாமி,துரை தசரதன், வக்கீல் திருமலை, துளசி, கோவர்த்தனன், ஹரி சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில்

# பாகநிலை முகவர்கள் (BLA-2), BDA, BYO ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. முன்னிலை!

சென்னை, மார்ச் 23-
கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகினங்க, அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில் பாகநிலை முகவர்களின் (BLA-2) BDA ,BYO ஆலோசனைக் கூட்டம் 21.03.2026 சனிக்கிழமை காலை 11.00 மணி அளவில் PSB CONVENTION ஹாலில் இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு தலைமையில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்டம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளருமான பி.முனியான்டி, த.செ.கு.உறுப்பினர், அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி தெற்கு பகுதி கழக செயலாளரும் மாமன்ற துணை தலைவருமான டி.எஸ்.பி.இராஜகோபால் மற்றும் மரு.அணி.அமைஜி.சாந்தகுமாரி மா.ஆதி. நல.அ LPF.மோகன் மா. மீனவ.அமை து.ஆயிரம், அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் க.முரளி பாபு, அ.செல்வம், க. கதீஜா, மா.ரமேஷ், வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு. வீரா, வெ.இராதாகிருஷ்ணன், மு.இரகு, த. கண்ணபிரான், எம்.கமல் எம்.சி., மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி MC , அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ்ரவி க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி எம். ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி ஆ. இரா,அருண், கோ.சேகர்லால் உள்ளிட்டோர் கலந்துகொண்டார்கள்.

அம்பத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் நன்றியுரையாற்றினார்.

## மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில் மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்ட நிர்வாகிகள் கூட்டம்!

# 2026 இல் திராவிட மாடல் 2.0 அரசு தொடர அயராது உழைப்போம்!

## புழல் எம்.நாராயணன் முன்னிலையில் தீர்மானம்!

சென்னை, மார்ச்.23-
சென்னை வடகிழக்கு மாவட்டம்,மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்ட நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கூட்டம் மாத்தூர் எம்.எம்.டி.ஏ. மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.துரைசாமி இல்லத்தில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச் செல்வன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி, மீண்டும் திராவிட மாடல் 2.0 அரசு மலர்ந்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை அரியணை ஏற்ற அல்லும் பகலும் அயராது பாடுபடுவது என உறுதி மேற்கொண்டார்.

தமிழ்நாட்டு மகளிருக்கு எண்ணிலடங்காத சாதனைகளை நிகழ்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வெல்லும் தமிழ் பெண்கள் முன்னறிப்பில் நூறு சதவீதம் நிறைவேற்றிக் கொடுத்த 19-வது வட்டத்திற்குட்பட்ட பாக முகவர்கள் பாக உறுப்பினர்கள் பாக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பாக இளைஞர்கள் அனைவருக்கும் இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஓரணியில் தமிழ்நாடு மற்றும் வெல்லும் தமிழ் பெண்கள் மூலம் தினந்தோறும் பாடுபட்டு வரும் கழகத்தினருக்கும் கழக மகளிர் அணி அனைவருக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் கவுன்சிலர் க. காசிநாதன் ,மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,மாவட்ட பிரதிநிதிகள் பி. நிர்மல் குமார், வி. கார்த்திகேயன், கே. ராஜா,மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ். உதயகுமார், பி. ஜெயராஜ், பி. துரைசாமி, துரைதசரதன், வட்ட கழக நிர்வாகிகள் வக்கீல் ஏ. திருமலை, துளசி, கோவர்த்தனன், ஹரி சுப்பிரமணியன்,

பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் சுகாசினி, அத்திக்குளம் தேவி, பெரியநாயகி, கஸ்தூரி, சரஸ்வதி, சின்ன மாத்தூர் இரா. குகன், சசிதரன், சாய் சந்திப்,

பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் தமிழரசன், ஆர். மலர்மன்னன், விக்ரமன் நாகராஜன, டில்லி பாஷா, லோகன், சாந்தகுமார், எஸ். பிரவீன் குமார், பி. சுந்தரி, எஸ். வி. செல்வராஜ், கலைச்செல்வி, வி. சுரேஷ்குமார்,சி. ஜானகிராமன், கங்காதரன், கார்த்திக், சாந்தி, அருணா, கௌரி, வினோத், குமார், ஹரி பிரசாத், சங்கீதா, யோகலட்சுமி, துளசி, ரோஸி, கோடீஸ்வரி, விக்டர், கோமதி, அரசு ICF சிவப்பிரகாசம், பன்னீர்செல்வம், மதிவாணன், கிருஷ்ணன், சுமதி, பரிமளா, நாகராஜன், சின்ன மாத்தூர் காசி மீனா, அரவிந்த், எஸ். ஆனந்தன், அம்சா, டேனியல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் – ஊராட்சி வாரியாக

# பாக நிலை முகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## படப்பை ஆ. மனோகரன் தலைமையில் நடைபெற்றது!

காஞ்சிபுரம், மார்ச் 23-
திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில், 20.03.2026 வெள்ளிக்கிழமையன்று குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் தலைமையில் 18 ஊராட்சிகளில் கிளை செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2) கலந்தாலோசனைக் கூட்டம் ஊராட்சி வாரியாக நடைபெற்றது.

மணிமங்கலம், மலைப்பட்டு, சேத்துப்பட்டு, கரசங்கால், ஊராட்சிகள் கோ. தட்சிணாமூர்த்தி இல்லத்திலும், ஆதனூர் ஊராட்சி த. தமிழமுதன் இல்லத்திலும், காவனூர், மாடம்பாக்கம் ஊராட்சிகள் ரா.தீபக்ராஜ் அலுவலகத்திலும்

செரப்பணஞ்சேரி, ஒரத்தூர், சாலமங்கலம், வைப்பூர், ஊராட்சிகள் சி.பார்த்தசாரதி இல்லத்திலும் வட்டம்பாக்கம், வளையக்கரணை, நாட்டரசன்பட்டு, சென்னக்குப்பம், எழுச்சூர், வடக்குப்பட்டு ஊராட்சிகள் வ. நந்தகோபால் இல்லத்திலும், படப்பை ஊராட்சி படப்பை ஆ.மனோகரன் இல்லத்திலும் கூட்டங்கள் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில், ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் 18 ஊராட்சிகளில் கிளை செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2) கலந்தாலோசனைக் கூட்டம் ஊராட்சி வாரியாக நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.